20th April 1960]

பிரதேசங்களில் அந்த வேலைகள் முடிந்த பிறகுதான் அங்குள்ளவர்கள் ரயத்வாரி அனுகூலங்களைப் பெற்று முன்னேற்றமடைய முடியும். ஸெட்டில்மெண்ட் வேலைகளை முடிக்க இன்னும் மூன்று ஆண்டுகள் ஆகும் என்று கனம் அமைச்சரே சொன்னார். எனவே, சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர்களின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டு இந்த வேலைகள் துரிதப் படுத்தப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஆட்களை அதிகப்படுத்துவதால் மாத்திரமே இந்த வேலையைத் துரிதமாகச் செய்துவிட முடியாது. "செக்" பண்ண வேண்டியவைகளை எப்படி எப்படி செக் பண்ண வேண்டுமோ அப்படி அப்படி செக் பண்ணுவது போன்ற காரியங்களைச் செய்வதற்கு ஆகக்கூடிய நாட்கள் ஆகத்தான் ஆகும்.

SRI N. MARUDACHALAM : ஸர்வே நடத்த வேண்டும் என்று பஞ்சாயத்து போர்டுகளிடமிருந்து சர்க்காருக்கு ஏதாவது விண்ணப்பங்கள் வந்திருக்கின்றனவா ? அப்படி வந்திருந்தால், அவைகள் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : தெரியவில்லை, இதுபற்றி என்னிடம் ஒன்றும் தகவல் இல்லை.

Minimum wages for agricultural farm labourers

* 747 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சர்க்கார் விவசாய பண்ணைகளில் வேலை செய்யும் விவசாயத் தொழிலாளர்களுக்கு விவசாய கூலி நிர்ணயச் சட்டப்படி கூலி கொடுப்பதில்லை என்பது உண்மையா ?

(ஆ) அப்படியானால், இனிமேலாவது கொடுக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The Director of Agriculture, Madras, has been addressed for furnishing the information. His report is awaited.

SRI V. K. KOTHANDARAMAN : கோவை விவசாயப் பண்ணையிலும் குடியாத்தம் ஷுகர்கேன் ரிசர்ச் பண்ணையிலும் தொழிலாளர்களுக்கு விவசாயக் கூலி நிர்ணயச் சட்டப்படி கூலி கொடுக்கப்படுவதில்லை என்று கனம் அமைச்சருக்கு ரிப்போர்ட் வந்திருக்கிறதா ? அப்படியானால் அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? அவர்களுக்கு அச் சட்டப்படி கூலி கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது பற்றி என்னிடம் தகவல் இல்லை என்று சொன்னேன். இது சம்பந்தமாக அங்குள்ள நிலைமையைத் தெரிவிக்கும்படி விவசாய இலாகா டைரெக்டரைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அவரிடமிருந்து தகவல் வந்த பிறகு, ஏதாவது செய்ய வேண்டுமா என்பது கவனிக்கப்படும்.

SRI A. GOVINDASAMY : சர்க்கார் நடத்தும் விவசாயப் பொறுக்கு விதைப் பண்ணைகளில் வாரத்திற்கு ஒரு முறை கூலி கொடுக்கப்படுகிறது. அங்கே தொழிலாளர்களுக்கு தினக் கூலி கொடுக்கவும் பகல் உணவு கொடுக்கவும் அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதற்கு தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்வேன்.

[20th April 1960

Sri N. MARUDACHALAM : விவசாயப் பண்ணையில் வேலை செய்யும் விவசாயிகள் 5, 6 வருஷங்களாக வேலை செய்து வருகிறார்கள். அவர்களை நிரந்தரக் கூலிகளாக ஆக்க சர்க்கார் முன் வருமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: இதற்கு என்னிடம் தகவல் இல்லை. தனிக்கேள்வி போட்டால் பிற்பாடு விடையளிக்க முடியும்.

Prices of foodstuff

*748 *Q.*—Sri N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state whether the question of stabilisation of prices of food articles has been discussed and approved at the meeting of the National Development Council held at Delhi on the 19th and 20th March 1960;

The Hon. Sri M. BHAKTAVATSALAM : At the meeting held on 19th and 20th March 1960, the National Development Council considered some basic questions relating to the Third Five-Year Plan including price policy. It was generally agreed that the plan could be formulated only on the basis that the price line would be held. It was also agreed that the Chief Ministers should meet again to discuss specific measures relating to price policy. Sir, I may add that since this answer was drafted, a meeting of the National Development Council was held on the 17th instant, and that Council has appointed a small sub-committee to go into the question of this price policy.

Sri N. K. PALANISAMI: May I know whether the Government have made any specific proposals in the National Development Council regarding price stabilisation in our State? If so, may I know the details ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: This Government like any other Government made certain proposals for the consideration of the National Development Council. This Government have suggested a kind of partial procurement and running of fair price shops. But, meanwhile, the entire question has been referred to the Sub-Committee of the National Development Council. The question will be taken up again after the Sub-Committee presents its report.

Sri N. K. PALANISAMI: May I know whether the scheme of State Trading was discussed and if so what was the result of the discussion ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The question of State Trading is being discussed at every meeting. State Trading is not discussed as an ideal. The question is to what extent it cou'd be undertaken in order to solve the problem of prices. It is in that spirit the question has been tackled.

Sri K. ANBAZHAGAN : உணவு விலையை ஒரு மட்டத்திலே நிர்ணயிப்பதற்காக நடத்தப்படுகிற ஆலோசனையில், அகில இந்தியாவில் உணவுப் பழக்க வழக்கங்கள் மாறுபடுவதாலும், மாகாணங்களில் உணவுப் பொருள்களின் விளைச்சலின் தரம் மாறுபடுவதாலும், அகில இந்திய ரீதியில் ஒரு கொள்கையை வகுக்க முடியும் என்று இந்த அரசாங்கம் கருதுகிறதா ? அல்லது இந்த மாகாணத்திற்கு என்று ஒரு தனி விலைவாசிக் கொள்கையை வகுக்க வேண்டுமென்று இந்த அரசாங்கம் கருதுகிறதா ?